ஏப்ரல் 28, 2022

# ஒன்ராறியோவின் கட்டுமானத் திட்டம் (Ontario's Plan to Build)

## *2022 வரவு செலவுத் திட்டம்* சிறந்த வேலைகள் மற்றும் உயர்ந்த ஊதியங்கள், நெடுஞ்சாலைகள், போக்குவரத்து மற்றும் மருத்துவமனைகளின் கட்டுமானப் பணி அத்துடன் குடும்பங்களுக்கான செலவுக் குறைப்பு ஆகியவற்றுக்கான ஒரு திட்டத்தை ஆதரிக்கின்றது

ரொறன்ரோ - இன்று, நிதி அமைச்சர் Peter Bethlenfalvy 2022 வரவு செலவுத் திட்டத்தை வெளியிட்டார். ஒன்ராறியோவின் கட்டுமானத் திட்டம் ஐந்து பிரதான விடயங்களை உள்ளடக்கியுள்ளது:

1. ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புதல்
2. தொழிலாளர்களுக்காகச் செயற்படுதல்
3. நெடுஞ்சாலைகள் மற்றும் முக்கிய உட்கட்டமைப்புகளை உருவாக்குதல்
4. செலவுகளைக் குறைத்தல்
5. இயங்கும் நிலையில் தொடர்ந்திருப்பதற்கான ஒரு திட்டம்

அரசாங்கத்தின் இந்தத் திட்டமானது, முக்கியமான கனிமங்கள், பேட்டரிகள், மின்சார மற்றும் கலப்பின வாகன உற்பத்தி ஆகியவற்றில் வாய்ப்புகளை அதிகரிப்பதுடன், தொழிலாளர்களுக்குச் சிறந்த வேலைகளையும் உயர்ந்த ஊதியங்களையும் வழங்கவும், குடும்பங்களுக்குச் செலவுகளைக் குறைக்கவும் உதவும். மேலும், நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, மருத்துவமனைகள் மற்றும் பிற முக்கிய உட்கட்டமைப்புப் பணிகளைத் தொடங்கவும் இத்திட்டம் உதவும். இயங்கும் நிலையில் தொடர்ந்திருப்பதற்கான ஒரு திட்டத்தின் ஆதரவுடன், அரசாங்கம் ஒன்ராறியோவைக் கட்டமைக்கின்றது.

"ஒன்ராறியோவின் மக்கள் அதனைக் கட்டியெழுப்புவதற்கான சரியான திட்டம் ஒன்றைக் கொண்ட ஒரு அரசாங்கத்திற்குத் தகுதியானவர்கள்" என்று அமைச்சர் Bethlenfalvy கூறினார். "எமது அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டமானது முதல்வர் Ford இன் தொலைநோக்காகும். மேலும் எமது திட்டம் சாக்குப் போக்குகளைக் குறைத்து, ஒன்ராறியோ மக்களின் முன்னுரிமைகளை உடனடியாகச் செயற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகும்."

*2022 வரவு செலவுத் திட்டமானது*, அரசாங்கத்தின் வலுவான நிதி நிர்வாகத்தின் சாதனைப் பதிவைத் தொடர்கின்றது. அடுத்த மூன்று ஆண்டுகளில், அடிப்படைத் திட்டச் செலவினங்களை ஆண்டொன்றுக்குச் சராசரியாகக் கிட்டத்தட்ட ஐந்து சதவீதத்தினால் அதிகரிப்பதனை இந்தத் திட்டம் உள்ளடக்கியுள்ளது. *2021 வரவு செலவுத் திட்டத்தில்* திட்டமிடப்பட்டதை விட இரண்டு ஆண்டுகளுக்கு முன்னராகவே ஒன்ராறியோவின் பற்றாக்குறையை நீக்கும் மீட்புத் திட்டத்தையும் இந்த வரவு செலவுத் திட்டம் முன்வைக்கின்றது.

"எமது அரசாங்கத்திடம் ஒரு திட்டம் உள்ளது, அந்த திட்டம் செயற்படுகின்றது," என்று அமைச்சர் Bethlenfalvy கூறினார். "ஆனால் வேலை இன்னமும் முடிந்து விடவில்லை, பணியும் முடியவில்லை. ஒன்ராறியோ மக்களுக்காக அதைச் செய்ய நாங்கள் தயாராக இருக்கின்றோம்."

**ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புதல்** அரசாங்கத் திட்டத்தின் முதலாவது பிரதான விடயமாகும். 2004 மற்றும் 2018 க்கு இடையில் 300,000 உற்பத்தி வேலைகளை ஒன்ராறியோ இழந்துள்ள நிலையில், வேலைகளை உருவாக்குவதற்கும், அனைவருக்கும் எல்லா இடங்களிலும் செழிப்பான வாழ்வை கட்டமைப்பதற்கும் அரசாங்கம் ஒரு திட்டத்தைக் கொண்டுள்ளது.

சிறப்பம்சங்களில் அடங்குபவை:

- ஒன்ராறியோவின் முக்கியமான கனிமவள வாய்ப்புகளை வடக்குப் பகுதியில் தொடங்குவதன் மூலம் பெற்றுக் கொள்ளுதல். ஒன்ராறியோத் தொழிலாளர்களால் அடுத்த தலைமுறை மோட்டார் வாகனங்கள் ஒன்ராறியோவில் உருவாக்கப்பட்டு வட அமெரிக்கா மற்றும் உலகம் முழுவதும் விற்பனை செய்யப்படுவதால், சுத்தமான எஃகு, பேட்டரிகள் மற்றும் கலப்பின மற்றும் மின்சார வாகனங்கள் ஆகியவற்றுக்குரிய எதிர்காலத்தின் ஒரு பகுதியாக முக்கியமான கனிமங்கள் இடம்பெறும். அரசாங்கத்தின் இத்திட்டம், Ring of Fire வரையுள்ள அனைத்து-பருவகாலத்துக்கும் ஏற்ற சாலைகள், வளமான வாழ்வுக்கான பாதையை உருவாக்குதல் போன்ற மரபுவழி உட்கட்டமைப்புகளுக்காக, சுமார் $1 பில்லியன் தொகையை உள்ளடக்குகின்றது. 2022-23 இல் $2 மில்லியன் தொகையையும் 2023-24 இல் $3 மில்லியன் தொகையையும் கொண்ட முக்கிய கனிமவள நவீனமயமாக்கல் நிதியம் (Critical Minerals Innovation Fund) ஒன்றை உருவாக்குவதற்கு, முக்கிய கனிமங்கள் குறித்த திட்டத்தினாலும் (Critical Minerals Strategy) இந்தத் திட்டம் ஆதரிக்கப்படுகின்றது.
- எதிர்கால வாகனங்களை உருவாக்குவதில் வட அமெரிக்காவின் தலைமைப்பீடத்தில் ஒன்ராறியோ இருப்பதால், நல்ல உற்பத்தி வேலைகளை உருவாக்க உதவுதல். கடந்த 18 மாதங்களில் வாகன உற்பத்தித் தேவைகளுக்கும், பேட்டரி உற்பத்திக்கும் உரிய புதிய முதலீடுகளாக $12 பில்லியனுக்கும் அதிகமான தொகையை, ஏப்ரல் 2022 தொடக்கத்தில் ஒன்ராறியோ கண்டுள்ளது. மாகாணத்தில் வாகனங்களை உருவாக்க உதவுவதற்காகத், தூய்மையான, குறைந்த -மாசு உமிழ்வைக் கொண்ட எஃகு உற்பத்தியில் மாகாணத்தை உலகின் முன்னணி உற்பத்தியாளராக மாற்றுவதற்குரிய முதலீடுகளை ஒன்ராறியோ ஆதரிக்கின்றது.

- பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க ஒன்ராறியோ முழுவதும் உள்ள சமூகங்களுக்கு மாகாண ஏஜென்சிகளில் வேலைகளை கொண்டு வருவதற்காகச் செயற்படுதல். பணியிடப் பாதுகாப்பு மற்றும் காப்புறுதிச் சபையின் (Workplace Safety and Insurance Board - WSIB) தலைமையகத்தை லண்டனுக்கு மாற்றுவது, அந்த நிறுவனம் மற்றும் அதன் பிற பங்காளருடன் நெருங்கிய கூட்டுறவுடன் பணிபுரிவது மற்றும் புதிய அரசு நிறுவனங்களைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் முக்கியமான சமூகங்களை அடையாளம் காண்பது ஆகியவற்றுடன் இது தொடங்குகின்றது.
- முக்கியமான தொழில்நுட்பங்களை உருவாக்கவும் சொந்தமாக்குவதற்குமான உலகளாவிய போட்டியில் அதிகார வரம்புகளுடன் மாகாணம் போட்டியிடுவதற்காக, அடுத்த மூன்று ஆண்டுகளில் கிட்டத்தட்ட $107 மில்லியன் தொகையை முதலீடு செய்தல்.
- 2025 இறுதிக்குள் ஒன்ராறியோவில் உள்ள ஒவ்வொரு சமூகத்திற்கும் அதிவேக இணைய அணுகலை வழங்குவதற்காகக் கிட்டத்தட்ட $4 பில்லியன் தொகை நிதியுதவி.

**தொழிலாளர்களுக்காகச் செயற்படுதல்** அரசின் திட்டத்தின் இரண்டாவது பிரதான விடயமாகும். ஒன்ராறியோவின் தொழிலாளர்கள், ஒன்ராறியோவிற்காகத் தாம் உழைப்பது போலக் கடினமாக உழைக்கும் ஒரு அரசாங்கத்திற்கு உரித்துடையவர்கள். அதனால்தான் சிறந்த வேலைகள் மற்றும் உயர்ந்த ஊதியங்களை ஆதரிக்கும் ஒரு திட்டத்தை அரசாங்கம் கொண்டுள்ளது.

சிறப்பம்சங்களில் அடங்குபவை:

- அக்டோபர் 1, 2022 அன்று, பொதுவான குறைந்தபட்ச ஊதியத்தை ஒரு மணி நேரத்திற்கு $15.50 ஆக உயர்த்துவது, அதே நேரத்தில் டிஜிட்டல் முறையில் தொழில் புரியும் பணியாளர்களுக்குப் பொதுவான குறைந்தபட்ச ஊதியம், மற்றும் முதன்-முதலாகக் கனடாவில் புதிய பாதுகாப்பு உத்தரவாதம்.
- ஒன்ராறியோவின் தொழிலாளர்களுக்கான சிறந்த வேலைகள் மற்றும் வாய்ப்புகளுக்கு மாகாணம் தொடர்ந்து ஆதரவளித்து வருவதால், மக்கள் மீண்டும் பயிற்சி பெறுவதற்கும் அவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும் ஆண்டுதோறும் $1 பில்லியன் தொகையை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் திட்டங்களில் முதலீடு செய்தல்.
- தொழிற் திறன்களுடன் புரியும் (Skilled Trades Strategy) பணிகளைக் குறைவாக மதிக்கும் தன்மையை மாற்றி, அந்த அமைப்பை எளிமையாக்க, அதன் திறமையான வர்த்தக உத்தியில் மூன்று ஆண்டுகளில் மேலதிகமாக $114.4 மில்லியன் தொகையை முதலீடு செய்தல்.
- பயன்பாட்டுத் துறைகளில் வேலைக்குத் தயாராக இருக்கும் பட்டதாரிகளின் பணிப் பயிற்சித் திட்டத்தை உருவாக்க உதவுவதோடு, மாணவர்களின் கல்வி, அனுபவம் மற்றும் திறன்களை விரைவாகத் தொழிற் பணிகளுக்குள் பயன்படுத்த அனுமதிப்பதற்காகக் கல்லூரிப் பட்டப்படிப்பை விரிவுபடுத்துதல், .

- தொற்றுநோய் மீட்பு முயற்சிகள் உட்பட அரசாங்கத்தின் திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டங்களை வலுப்படுத்த Employment Ontario (ஒன்ராறியோ வேலைவாய்ப்பு) மூலம் மேலதிக நிதியுதவியாக மூன்று ஆண்டுகளில் $268.5 மில்லியன் தொகையை வழங்குதல்.
- கடந்த மூன்று ஆண்டுகளில் முதலீடு செய்யப்பட்ட கிட்டத்தட்ட $200 மில்லியனைத் தவிர, 2022–23 இல் $5 மில்லியன் புதிய நிதியுதவியுடன், பெரியளவில் பலதரப்பட்ட ஒன்ராறியோத் தொழிலாளர்களுக்கு ஆதரவளிக்க, ஒன்ராறியோவின் சிறந்த வேலைகள் (Better Jobs Ontario) திட்டமாக இரண்டாவது தொழிற் திட்டத்தை (Second Career program) மீண்டும் தொடங்குதல். ஒன்ராறியோவின் சிறந்த வேலைகள் திட்டமானது, பணிநீக்கம் செய்யப்பட்ட வேலையில்லாத தொழிலாளர்கள் தேவைக்கேற்ப, நல்ல ஊதியம் பெறும் வேலைகளுக்குத் தகுதி பெறுவதற்குத் தேவையான பயிற்சியை அணுக உதவுகின்றது மற்றும் உள்ளூர் முதலாளிகளை அவர்களுக்குத் தேவையான உயர் திறன்மிக்க தொழிலாளர்களுடன் இணைக்கின்றது.
- ஒன்ராறியோவின் தொழிலாளர் சந்தைத் தேவைகளுக்குப் பொருந்தக்கூடிய திறன்கள் மற்றும் அனுபவமுள்ள விண்ணப்பதாரர்களை நிரந்தர வதிவிடத்திற்குப் பரிந்துரைக்கும் ஒன்ராறியோவின் குடிவரவாளர்களைத் தேர்ந்தெடுக்கும் திட்டத்தில் (Ontario Immigrant Nominee Program - OINP) மூன்று ஆண்டுகளில் மேலதிகமாக $15.1 மில்லியனை உள்ளடக்கிய திட்டத்துடன் புதிய குடிவரவாளர்களைக் கவர்தல்.

**நெடுஞ்சாலைகள் மற்றும் முக்கிய உட்கட்டமைப்புகளை உருவாக்குதல்** அரசின் திட்டத்தில் மூன்றாவது பிரதான விடயமாகும். நீண்ட காலமாக, ஒன்ராறியோ மக்கள் பயணிகள் நிரம்பிய ரயில்களில் அல்லது வாகன நெரிசலில், வாகனங்களின் பின்னால் ஆயிரக்கணக்கான மணிநேரங்களை வீணடித்து, அடைபட்டு கிரிட்லாக்கில் சிக்கித் தவிப்பதால், மாகாணத்தின் பொருளாதாரத்திற்கு பில்லியன்கள் செலவாகின்றது. இது மாற வேண்டும். கட்டுப்படுத்தும் தடையை எதிர்த்துப் போராடவும், பொருளாதாரத்தை உயர்த்தவும் மற்றும் வேலைகளை உருவாக்கவும், நெடுஞ்சாலைகள், போக்குவரத்து மற்றும் பிற உட்கட்டமைப்புத் திட்டங்களைக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் பணிகளை ஆரம்பிக்கத் தொடங்குகின்றது.

சிறப்பம்சங்களில் அடங்குபவை:

- 2022-23 இல் $20 பில்லியன் உட்பட, அடுத்த 10 ஆண்டுகளில் மொத்தமாக $158.8 பில்லியன் தொகை முதலீடுகளுடன், மாகாண வரலாற்றில் உயர் லட்சியமான மூலதனத் திட்டங்களில் ஒன்றைத் திட்டமிடுதல்.
- மாகாணம் முழுவதும் பின்வருவனவற்றை உள்ளடக்கிய நெடுஞ்சாலைத் திட்டங்களைத் திட்டமிடவும் நிர்மாணிக்கவும் உதவுவதற்காக அடுத்த 10 ஆண்டுகளில் $25.1 பில்லியனை முதலீடு செய்தல்:
  - Highway 413 ஐ உருவாக்குதல்
  - Bradford Bypass ஐ உருவாக்குதல்
  - நெடுஞ்சாலை 401 இன் எதிர்கால விரிவாக்கத்தை செயற்படுத்துவதற்கான முதற் படிகள்
  - QEW Garden City Skyway ஐ மேம்படுத்துதல்

- Kitchener க்கும் Guelph க்கும் இடையே புதிய Highway 7 க்கான அடுத்த கட்டக் கட்டுமானப் பணிகளைத் தொடர்தல்
- Timmins Connecting Link ஆகிய நெடுஞ்சாலை 101 ஐப் புனரமைத்தல்
- பின்வருவன்வற்றை உள்ளடக்கிய பொதுப் போக்குவரத்திற்காக 10 ஆண்டுகளில் $61.6 பில்லியன் தொகையை முதலீடு செய்தல்:
  - Ontario Line இல் பாதை திறத்தல்
  - Sheppard Subway (சுரங்கப்பாதை) விரிவாக்கத்திற்கான திட்டமிடல் பணியை மேம்படுத்துதல்
  
  றொறன்ரோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்திற்கு Eglinton Crosstown West விரிவாக்கத்திற்கான திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு வேலை
  - The Bowmanville GO Rail விரிவாக்கம்
  - லண்டன் மற்றும் றொறன்ரோ யூனியன் ஸ்டேஷன் ஆகியவற்றுக்கிடையே வாரநாள் GO ரயில் பயணங்கள்
  - வடகிழக்கு ஒன்ராறியோவிற்கு பயணிகள் ரயில் சேவை.

பாடசாலைகள் மற்றும் சிறுவர் பராமரிப்பு இடங்களை உருவாக்க மற்றும் புதுப்பிக்க அடுத்த 10 ஆண்டுகளில் மூலதன மானியங்களில் சுமார் $14 பில்லியன் தொகையை முதலீடு செய்தல்.

மேலதிக விவரங்களுக்கு *ஒன்ராறியோவைக் கட்டியெழுப்புவதற்கான மூலதனத் திட்டம்* (*A Capital Plan for Building Ontario*) ஐப் பார்க்கவும்.

**செலவுகளைக் குறைத்தல்** அரசின் திட்டத்தில் நான்காவது பிரதான விடயமாகும். செலவுகள் அதிகரிக்கும் போது, அது குடும்பங்கள், முதியவர்கள், தொழிலாளர்கள் ஆகியோரிலும் பொருளாதாரத்திலும் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதனால்த்தான், வீட்டுவசதியை அதிகரிப்பதன் மூலமும், வாகனம் ஓட்டும் போது அல்லது பொதுப் போக்குவரத்தைப் பாவிக்கும் போது செலவுகளைக் குறைப்பதன் மூலமும், சிறுவர் பராமரிப்பு முதல் வரிகள் வரை அனைத்திலும் நிவாரணம் வழங்குவதன் மூலமும் செலவைக் குறைக்க உதவும் ஒரு திட்டத்தை அரசாங்கம் கொண்டுள்ளது.

சிறப்பம்சங்களில் அடங்குபவை:

- கட்டுப்படியாகக்கூடிய வீட்டுவசதிப் பணிக்குழுவினரால் (Housing Affordability Task Force) தெரிவிக்கப்படும் பரிந்துரைகள் மூலம் வீட்டு நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்குரிய நீண்ட-காலத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்துதல் வீடுகள் கட்டத் தொடங்குவதற்குரிய அனுமதிப் பத்திரங்களை விரைவாகப் பெறுவதனைத் துரிதப்படுத்தல், வெளிநாட்டு முதலீட்டு வணிகர்களை விட ஒன்ராறியோவில் வசிப்பவர்களுக்கு வீடு வாங்குவதற்குரிய முன்னுரிமை அளித்தல், நெறிமுறையற்ற டெவலப்பர்களை ஒடுக்குதல் மற்றும் அடுத்த நான்கு வருடங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் வீட்டுவசதி வழங்கல் செயற்திட்டத்தை அறிமுகப்படுத்த உறுதியளிப்பதன் மூலம், அனைத்து வகையான வீடுகளையும் உருவாக்குவதை ஆதரித்தல் ஆகியன இதில் அடங்கும்.
- பயணிகள் வாகனங்கள், இலகுரக டிரக்குகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மொபெட்களுக்கான உரிமத் தகடு புதுப்பித்தல் கட்டணத்தை நீக்கி, திரும்பப் பெறுவதன் மூலம் வாகனம் ஓட்டுவதற்கான செலவைக் குறைத்தல், ஜூலை 1, 2022 முதல் ஆறு மாதங்களுக்கு எரிவாயு வரியை லிட்டருக்கு 5.7 சதங்களால் குறைத்தல், நெடுஞ்சாலை 418 மற்றும் 412 இல் சுங்கக் கட்டணங்களை நீக்குதல்.
- Low-income Individuals and Families Tax Credit ஐ (குறைந்த வருமானம் கொண்ட தனிநபர்கள் மற்றும் குடும்பங்களின் வரிக் கடனை) மேம்படுத்துவதன் மூலம் சராசரியாக சுமார் 1.1 மில்லியன் வரி செலுத்துவோருக்கு Personal Income Tax (தனிப்பட்ட வருமான வரி - PIT) நிவாரணத்தில் மேலதிகமாக $300 வழங்குவதற்கு முன்மொழிதல்.
- பெற்றோர்களின் சிறுவர் பராமரிப்புக் கட்டணங்களைக் குறைத்தல் மற்றும் செப்டம்பர் 2025 க்குள் சிறுவர் பராமரிப்புக்குத் தினசரி சராசரியாக $10 செலவிடும் இலக்கின் ஒரு முக்கியமான படியாக மத்திய அரசாங்கத்துடன் $13.2 பில்லியன் தொகை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதன் மூலம் ஒன்ராறியோவிற்கு நியாயமான ஒரு ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

**இயங்கும் நிலையில் தொடர்ந்திருப்பதற்கான ஒரு திட்டம்** என்பது அரசாங்கத் திட்டத்தின் ஐந்தாவது பிரதான விடயமாகும். 32 மில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசி டோஸ்கள் நிர்வகிக்கப்பட்டு, 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களில் 90 சதவீதத்திற்கும் அதிகமானோருக்கு முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்டதால்,COVID-19 தொற்றுநோய்களின் போது பல மாகாண அதிகார வரம்புகளை விட ஒன்ராறியோ சிறப்பாகச் செயற்பட்டுள்ளது. மாகாணம் எச்சரிக்கையுடன் கட்டுப்பாடுகளை நீக்கியுள்ளதுடன், பொருளாதாரமும் மீட்சியடைந்து வருகின்றது. வரக்கூடிய சவால்களை எதிர்கொள்ள, அரசாங்கம் இயங்கும் நிலையில் இருக்கும் அதன் திட்டத்தில் குறிப்பிடத்தக்க முதலீடுகளைச் செய்து வருகின்றது.

சிறப்பம்சங்களில் அடங்குபவை:

- பின்வருவன மூலம் ஒன்ராறியோவின் சுகாதாரப் பணியாளர்களை விரிவாக்குதல்:
- மருத்துவத் தாதி போன்ற முன்னுரிமைத் திட்டங்களில் சேரும் மற்றும் பட்டப்படிப்புக்குப் பிறகு அவர்கள் படித்த பிராந்தியத்தில் உள்ள பின்தங்கிய சமூகங்களில் பணிபுரியும் தகுதியுள்ள 2,500 முதுநிலை மாணவர்களுக்குப் புதிய கற்றல் மற்றும் தங்கும் உதவித்தொகையை (Learn and Stay Grant) அறிமுகப்படுத்துதல்.
- ஒன்ராறியோவின் தாதியர்களுக்கு ஒரு நபருக்கு $5,000 வரை தக்கவைப்பு ஊக்கத்தொகையை வழங்க இரண்டு ஆண்டுகளில் $764 மில்லியன் முதலீடு செய்வதன் மூலம் சுகாதாரத் துறை முழுவதும் தாதியர்களைத் தக்கவைத்துத், தற்போதைய தாதிப் பணியாளர்களை நிலைப்படுத்த உதவுதல்.
- மார்ச் 2020 முதல் இந்த அமைப்பில் சேர்க்கப்பட்ட 8,600 சுகாதாரப் பணியாளர்களைக் கட்டியெழுப்புதல், 2022–23ல் சுகாதாரத் திறனை மேம்படுத்த 230 மில்லியன் தொகையை முதலீடு செய்தல்.
- பிராம்ப்டன் மற்றும் ஸ்கார்பரோவில் உள்ள புதிய மருத்துவப் பாடசாலைகள் உட்பட, 160 இளங்கலை மற்றும் 295 முதுகலை நிலைகளை விரிவுபடுத்துவதற்காக 2023-24 இல் தொடங்கி இரண்டு ஆண்டுகளில் $42.5 மில்லியன் தொகையை முதலீடு செய்தல்.
- ஒன்ராறியோவில் தயாரிக்கப்படும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களின் (PPE) உற்பத்தியை ஆதரிப்பதற்காக, Ontario Together (ஒன்றிணையும் ஒன்ராறியோ) நிதியில் $77 மில்லியனுக்கும் அதிகமான முதலீடுகளை மேற்கொள்வதற்காக, ஏப்ரல் 2022 நிலவரப்படி, Ontario Together நிதியைக் கிட்டத்தட்ட $230 மில்லியன் தொகையாக்கி, அதிகமான முக்கியமான பொருட்களை உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதுடன், எதிர்கால அவசரநிலைகளுக்கு ஒன்ராறியோ தயாராக இருப்பதை உறுதி செய்தல்.
- உயிரியல் உற்பத்தி மற்றும் உயிர் அறிவியலுக்கான (Life Sciences Innovation Program) உலகளாவிய மையமாக மாறுவதற்கான வாய்ப்பைத் தழுவி, சிகிச்சை மற்றும் மருத்துவம் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் வணிகத் திறனை மேம்படுத்தவும் அளவிடவும் புதிய வாழ்க்கை அறிவியல் கண்டுபிடிப்புத் திட்டத்தில் மூன்று ஆண்டுகளில் $15 மில்லியன் தொகையை மூலோபாய முதலீடு செய்தல்.

- 10 ஆண்டுகளில் 3,000 புதிய படுக்கைகளை சேர்க்கும் 50 க்கும் மேற்பட்ட பெரிய மருத்துவமனைத் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் மருத்துவமனை மற்றும் சுகாதார உட்கட்டமைப்பில் அடுத்த 10 ஆண்டுகளில் $40 பில்லியனுக்கும் கூடுதலாக முதலீடு செய்து மருத்துவமனைகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.
- 2022–23 இல் மேலதிகமாக $3.3 பில்லியனை மருத்துவமனைகளில் வரலாற்றுச் சிறப்புமிக்க முதலீடுகளாகச் செய்வதன் மூலம், 2018–19 முதல் மருத்துவமனைகளில் செய்த மொத்த  முதலீடுகளை $8.8 பில்லியனாகக் கொண்டு வருதல்.  தொற்றுநோய்களின் போது 3,000 க்கும் மேற்பட்ட மருத்துவமனைப் படுக்கைகளைத் தொடர்ந்து பேண மூன்று ஆண்டுகளில் $3.5 பில்லியன் தொகையையும், COVID-19 இன் போது புதிதாகச் சேர்க்கப்பட்ட நூற்றுக்கணக்கான வயது வந்தோர், குழந்தைகள் மற்றும் பிறந்த குழந்தைகளுக்கான சிகிச்சைப் படுக்கைகளைத் தொடர்ந்து பேண மூன்று ஆண்டுகளில் $1.1 பில்லியன் தொகையையும் அரசாங்கம் முதலீடு செய்கின்றது.
- அடுத்த மூன்று ஆண்டுகளில் மேலதிகமாக $1 பில்லியன் வரை முதலீடு செய்ய திட்டமிடுவதன் மூலம் வீட்டுப் பராமரிப்பில் கூடுதல் முதலீடுகளைச் செய்தல்.  70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட முதியோர்களுக்குத் தகுதியான வீட்டுப் பராமரிப்பு, மருத்துவச் செலவுகளுடன் மக்கள் தங்கள் வீடுகளில் நீண்ட காலம் தங்கியிருக்க உதவுவதற்காக, Ontario Seniors Care at Home Tax Credit இல்  (ஒன்ராறியோ மூத்தோர்களுக்கான வீட்டு வரிக் கிரெடிட்டில்) புதிய, திரும்பப்பெறக்கூடிய ஒன்ராறியோ முதியோர் பராமரிப்புத் திட்டத்தையும் அரசாங்கம் முன்மொழிகிறது.

## விரைவுச் செய்திகள்

- ஒன்ராறியோவின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2021 இல் 4.3 சதவிகிதம் அதிகரித்துள்ளது, மேலும் 2021 இல் வேலைவாய்ப்பு 344,800 நிகர வேலைகள் அல்லது 4.9 சதவிகிதத்தால் உயர்ந்துள்ளது, இது பதிவு செய்யப்பட்ட தொழில் வளர்ச்சியின் வலுவான வருடாந்த வளர்ச்சியாகும்.
- *2021 வரவு செலவுத் திட்டத்தில்* முன்னறிவிக்கப்பட்டதை விட இரண்டு ஆண்டுகளுக்கு முன்னராகவே, 2027–28 க்குள் ஒன்ராறியோ உபரி நிலைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பற்றாக்குறையானது, நடுத்தர காலமாகிய 2022-23 இல் $19.9 பில்லியனாகவும் 2023-24 இல் $12.3 பில்லியனாகவும் மற்றும் 2024-25 இல் $7.6 பில்லியனாகவும் குறைவடையும் என அரசாங்கம் எதிர்வு கூறுகின்றது. இது *2021 வரவு செலவுத் திட்டத்தின்* பின்னர் ஏற்பட்டு வரும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கின்றது.
- நிகர கடன்-ஜிடிபி விகிதம் 2021-22 இல் 40.7 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது, இது *2021 வரவு செலவுத் திட்டத்தில்*முன்வைக்கப்பட்ட 48.8 சதவீதத்தை விட 8.1 சதவீத புள்ளிகள் குறைவாக இருக்கும். நடுத்தர காலக் கண்ணோட்டத்தில், ஒன்ராறியோவின் நிகர கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 2022-23 மற்றும் 2023-24 இல் 41.4 சதவீதமாக இருக்கும் என்றும், 2024-25 இல் 41.3 சதவீதமாகக் குறையும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.
- *ஒன்ராறியோவின் கட்டுமானத் திட்டத்தின்* ஒரு பகுதியாக முன்மொழியப்பட்ட சட்டத் திருத்தங்கள், நிறைவேற்றப்பட்டால், ரொறன்ரோ நகராட்சி எல்லைகளில் தடையற்ற போக்குவரத்துச் சேவைகளை உருவாக்கவும், வாகனக் காப்புறுதி மோசடியைத் தடுக்கவும், ரொறன்ரோவில் WSIB தலைமை அலுவலகம் அமைக்கப்பட வேண்டிய தேவையை நீக்கவும் அது உதவும்.

## மேலதிக வளங்கள்

*2022 Budget: Ontario’s Plan to Build*

வாசிக்கவும் Highlights of the *2022 Budget: Ontario’s Plan to Build*

*A Capital Plan for Building Ontario*

Economic and Fiscal Overview

## ஊடகத் தொடர்புகள்

ontario.ca/finance-news

*Disponible en français*


Emily Hogeveen

அமைச்சர் அலுவலகம்

647-294-6166

Emily.Hogeveen@ontario.ca

Scott Blodgett

தகவற் தொடர்புப் பிரிவு

416-728-9791

Scott.Blodgett@ontario.ca